III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.2/2012

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 18-10-2023

| | | | |
|---|---|---|---|
| Name | : Manova | Caste | : |
| Father's Name | : Adimulam | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**முதலாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்தின் தாய் பத்திரங்கள் என்னிடம் தான் உள்ளது. அந்த பத்திரத்தை ஜான் வெஸ்லி, கிறிஸ்டிபல் மற்றும் பிலால் அகமது என்னிடம் கொடுத்தனர். எந்த தேதியில் என்று எனக்கு சரிவர தெரியவில்லை. ஒப்பந்தம் போடப்பட்டதற்கு பிற்பாடு கொடுக்கப்பட்டது. இந்த விவரத்தை நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் தாய் பத்திரங்களை பவர் ஏஜென்ட் கொடுத்தார் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த தாய் பத்திரங்களை பிரதிவாதிகள் 1 முதல் 3 வரையிலானோர் கொடுக்கவில்லை என்றும் அவர்கள் கொடுத்ததாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாய் பத்திரங்கள் தொலைந்துவிட்டது என்று முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் 10.01.2011 அன்று மக்கள் குரல் என்ற செய்தித்தாளில் விளம்பரம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் தாய் பத்திரமே கிடையாது என்றும் அந்த நிலையில் அவர்கள் என்னிடம் தாய் பத்திரத்தை கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த தாய் பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் தான்

உள்ளது. எனக்கும் 3 வது பிரதிவாதிக்கும் உறவு முறை நன்றாக உள்ளதா என்றால் இல்லை. இரண்டாவது ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்து 08.04.2011 லிருந்து எனக்கும் 3 ஆம் பிரதிவாதிக்கும் உறவு சரிவர இல்லை, நட்பு இல்லை மற்றும் பேச்சு வார்த்தை இல்லை. நான் 3 ஆம் பிரதிவாதிக்கு ரூ.3,25,000 ரொக்கமாக கடனாக கொடுத்தேன். இந்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வழக்குரையில் எந்த பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் வழக்குரையில் நான் சொல்லவில்லை. 15.03.2011 அன்று நான் ரொக்கமாக ரூ.3,25,000 வைத்திருந்தேன் என்பதை காண்பிக்கும் ஆவண ஆதாராம் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதை பெற்றுக் கொண்டதற்கு மூன்றாம் பிரதிவாதி பாண்டு எழுதி கொடுத்துள்ளார். அந்த பாண்டில் நரேஷ் என்பவர் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார். சாட்சியாக கையொப்பமிட்டுள்ள இன்னொருவர் பெயர் எனக்கு தெரியவில்லை. அன்டி பாண்டு பணம் பெற்றுக் கொண்டபோதே எழுதி கொடுக்கப்பட்டது. அன்டிபாண்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை மூன்றாம் பிரதிவாதி திருப்பி செலுத்திவிட்டாரா என்றால் இல்லை. 3 ஆம் பிரதிவாதி என்னுடன் சரியான உறவில் இல்லாத நிலையில் 15.03.2011 தேதியிட்ட பாண்டின் மீது பணத்தை திருப்பி பெற கடந்த 12 வருடங்களாக சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்கான காரணம் என்னவென்றால், நான் அவருக்கு கொடுக்க வேண்டிய பணத்திலிருந்து அந்த தொகையை கழித்து கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன். இந்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. உண்மையிலேயே வா.த.சா.10 பாண்டு ஏற்பட்டிருந்தால், 3 வது பிரதிவாதி ஒரு ரூபாய் கூட திருப்பி செலுத்தாத நிலையில் நான் அவர் மீது அதன் பேரில் சட்டப்படி நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் ஆதலால் அந்த ஆவணம் பொய்யானது என்றும் சொன்னால் சரியல்ல.

வா.த.சா.10 ஆவணம், இந்த வழக்கிற்கு பின்னிட்டு நானும் 3 வது பிரதிவாதியும் சேர்ந்து பொய்யாக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. 08.04.2011 அன்று 3 ஆம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட பவர் பத்திரம் ரத்து செய்யப்பட்டது. அன்றைய தேதியிலேயே 5 வது பிரதிவாதிக்கு பவர் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 10.02.2011 ல் 1 ம்ற்றும் 2 வது பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட்டான 3 ஆம் பிரதிவாதி 4 ஆம் பிரதிவாதிக்கு ஒரு ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2011 ல் கிரைய ஒப்பந்தம் கட்டாயமாக பதிவு செய்யப்படுவது நடைமுறையில் இல்லை என்றால் சரியல்ல. 2012 ல் கட்டாயமாக கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற சட்ட திருத்தம் அமலுக்கு வந்ததது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என்ன காரணத்திற்காக தாவா சொத்தை என்னிடம் விற்பதற்கு ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் கடனை தீர்ப்பதற்காக. 1 வது மற்றும் 2 வது பிரதிவாதிகள் தங்களது கடனை சீக்கிரமாக அடைக்க வேண்டும் என்ற காரணத்தினால் 3 ஆம் பிரதிவாதி மூலம் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்நிலையில் வா.த.சா.2 வில் 3 வருட காலம் அவகாசம் கொடுத்திருப்பதற்கான காரணம் என்னவென்றால் சாலை விரிவாக்கத்தின் காரணம் தான். அந்த விவரம் வா.த.சா.2 ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 4 வது பிரதிவாதியுடன் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் எனக்கு தெரிந்தும், தாவா சொத்தை மிகக்குறைந்த விலையில் பெற்று அபகரிக்க வேண்டும் என்ற நோக்கதில் 3 ஆம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு அதை பதிவு செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. எந்தவொரு நபரும் கடனை தீர்ப்பதற்கு உடனடியாக பணம் தந்தால் தான் சொத்தை விற்க முன்வருவார் என்றும் ஆதலால் நான் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் 3 வருட காலம்

அவகாசமாக வா.த.சா.2 ல் குறிப்பிட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.த.சா.2 ஐ நான் பதிவு செய்ததற்கான காரணம் 10.02.2011 அன்று 4 ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட ஒப்பந்த பத்திரத்தை மறைப்பதற்காக தான் என்றால் சரியல்ல. வா.த.சா.2 வில் தாய் பத்திரங்கள் என்னிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்று கண்டுள்ளதா என்றால் இல்லை. வா.த.சா.2 ல் தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதா குறிப்பிப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஒப்பந்தத்திற்கு பின்னர் ஒரு வாரத்திற்குள் என்னிடம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. வழக்குரையில் இதைப்பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

(கற்றறிந்த முதலாம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).